பக்கங்கள்:-25

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆடி 20 | செவ்வாய்க்கிழமை | 05.08.2025 | அதிர்வு 04 |
|---|---|---|---|---|---|

## மீட்ட சான்றுப்பொருள்கள் இன்று மக்கள் பார்வைக்கு!



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை

06



# தமிழின அழிப்புக்கான சான்றுகள் செம்மணியில் இருந்தே ஆரம்பம்!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

"தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டமைக்கான சான்றுகள் செம்மணியில் இருந்தே ஆரம்பமாகின்றன எனத் தோன்றுகின்றது. ஆகவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஒஸ்லாப் என்கின்ற சான்றுகளைச் சேகரிக்கின்ற பொறிமுறை ஒன்று உள்ளது. அதை வரவழைத்து இங்கு நடந்த விடயங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்பட வேண்டும்."

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

06

# நேற்றும் 5 மனித எலும்புக்கூடுகள் அடையாளம்



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று இடம்பெற்ற அகழ்வின் போது புதிதாக ஐந்து மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வின் 30ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது ஐந்து மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதேவேளை, ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட ஆறு மனித என்புத் தொகுதிகள் நேற்று

07




சாவகச்சேரி நகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றுக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்ட தலா ஒவ்வொரு பெண் உறுப்பினர்களின் தெரிவு தொடர்பில் உயர்நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிய தீர்ப்பின் விளைவு குறித்து நேற்று என் பத்தியில் கோடி காட்டி இருந்தேன்.

அதை ஒட்டி வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் சில அழைப்புகள் விவரம் கேட்டு வந்தன.

அடுத்து என்ன நடக்கும் என்பதுதான் பலரினதும் விசாரணையாக இருந்தது.

இந்த இரு பெண் உறுப்பினர்களும் அந்தந்த சபைகள் சார்பில் போட்டியிடுவதற்குத் தகுதி இல்லாதவர்கள், தகைமை அற்றவர்கள் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவர்கள் தகுதியீனமானவர்கள் என்றால் அந்த வேட்பு மனுக்களில் இருக்க வேண்டிய பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை உரிய

06



# சாட்சியங்களைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுப்போம்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுதி

செம்மணி மனித புதைகுழிகள் தொடர்பான சாட்சிகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கும் என்று அந்த ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

செம்மணி மனிதப் புதைகுழிகளின் அகழ்வுப் பணிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் நேற்று நேரில் பார்வையிட்டனர்.

புதைகுழிகளைப் பார்வையிட்ட பின்னர் அவர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளை நேரில் பார்வையிட்டோம். அகழ்வுப் பணிகள் தொடர்பிலும் கேட்டறிந்தோம்." – என்றனர்.

அதன்போது ஊடகவியலாளர் ஒருவர், "செம்மணிப் புதைகுழிகள் தொடர்பில் சாட்சியம் சொல்லத் தயார் என கிருஷாந்தி கொலை வழக்கில் குற்றவாளியாகச் சிறையில் இருக்கும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ என்பவர் கூறியுள்ளார். சிறையில் அவரது பாதுகாப்பு தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்குமா?" எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு, "அவருக்குச் சிறையில் அச்சுறுத்தல் இருப்பதாக எமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றால் நிச்சயமாக அவரது பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுப்போம்." – என்று அவர்கள் பதிலளித்தனர்

"யாழ்ப்பாணத்தில் 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கையை வெளியீடு செய்வீர்களா?" எனக் கேட்ட போது,

"யாழ்ப்பாணத்தில் 1996 – 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு 2003ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணைத்தளத்தில் பதிவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்." – என்று அவர்கள் பதிலளித்தனர்.

# தேசபந்துவின் தலைவிதி சபையில் இன்று நிர்ணயம்



பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அந்தப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்குக் கூடுகின்றது. ஆரம்ப கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை மேற்படி தீர்மானம் தொடர்பில் விவாதம் நடத்தப்படும். அதன்பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

மேற்படி தீர்மானத்துக்கு ஆதரவாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வாக்களிக்கவுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எதிராக வாக்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பனவும் ஆதரவாக வாக்களிக்கவுள்ளன என்று தெரியவருகின்றது.

# மஹிந்தவைக் கொழும்பில் இருந்து மெதமுலனவுக்கு வெளியேற்றச் சதி

## மொட்டுக் கட்சி கடும் விசனம்



முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய ஓய்வூதியம் உட்பட வரப்பிரசாதங்களை இல்லாது செய்வதற்கு அரசு முன்னெடுக்கும் நடவடிக்கை அரசியல் பழிவாங்கல் செயல் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி விமர்சித்துள்ளது.

“முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கொழும்பில் இருந்து மெதமுலனவுக்கு வெளியேற்றும் அரசியல் பழிவாங்கல் திட்டமே இதன் பின்னணியில் உள்ளது.” – என்று மஹிந்த ராஜபக்ஷவின் பேச்சாளரான சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“நாட்டு மக்களுக்கு ஆயிரம் பிரச்சினைகள் இருக்கையில், அவற்றுக்குத் தீர்வுகளைத் தேடாமல், முன்னாள் ஜனாதிபதிகள் மீது அரசின் கவனம் திரும்பியுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வரப்பிரசாதங்களை வழங்கும் நடைமுறை உலக நாடுகளில் உள்ளது. எனவே, முன்னாள் ஜனாதிபதிகளைப் பழிவாங்கும் நோக்கில் இங்கு சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை இலக்கு வைத்து அல்ல முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பழிவாங்கும் நோக்கில், அவரைக் கொழும்பில் இருந்து அகற்றி மெதமுலனவுக்குள் முடக்கும் முயற்சியே இடம்பெறுகின்றது.

எனவே, மஹிந்தவைக் கொழும்பில் இருந்து வெளியேற்றும் சட்டமூலம் என இதற்குப் பெயர் வைப்பதே பொருத்தமானதாக அமையும். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அது முன்னாள் ஜனாதிபதிகளுக்குச் செல்லுபடியாகுமா என்ற கேள்வி எழும். எனவே, ஜனாதிபதி அநுர உட்பட இனிவரும் ஜனாதிபதிகளுக்குத்தான் அது ஏற்புடையதாக அமையும். அவ்வாறு இல்லையேல் சர்வஜன வாக்கெடுப்பு உட்பட அரசமைப்பு மாற்றம் ஊடாகவே இதற்குரிய நடவடிக்கை இடம்பெற வேண்டும்.” – என்றார்.

# ஆயுதப் போருக்கு முடிவு கட்டிய மஹிந்தவை தமிழ் டயஸ்போராக்கள் பழிவாங்கக்கூடுமாம்

## அவர் உள்ளிட்ட முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பாதுகாப்பு அவசியம் என ஐ.தே.க. வலியுறுத்து

“இலங்கையில் ஆயுதப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்த ராஜபக்ஷ மீது தமிழ் டயஸ்போராக்கள் சிலர் இன்னமும் வைராக்கியத்துடனேயே உள்ளனர். இதனால் அவரைப் பழிவாங்க முற்படக்கூடும். எனவே, அவர் உட்பட முன்னாள் ஜனாதிபதிகளுக்குப் பாதுகாப்பு அவசியம்.”

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான முன்னாள் எம்.பி. சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஜனாதிபதி பதவியை வகிப்பவர் துணிவுடன் முடிவுகளை எடுக்க வேண்டும். அதற்குரிய சுதந்திரம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. உலக நாடுகளிலும் இந்த நடைமுறை உள்ளது. எனவே, ஜனாதிபதியால் எடுக்கப்படும் முடிவு 90 வீதமானோருக்குச் சாதகமாக இருக்கலாம். 10 வீதமானோர் அதனை எதிர்க்கலாம்.

எனவே, அந்த 10 சதவீதமானோர், ஜனாதிபதி ஓய்வுபெற்ற பின்னர் அவரைப் பழிவாங்க முற்படக்கூடும். அதனால்தான் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஓய்வின் பின்னரும்



பாதுகாப்பு உள்ளிட்ட வரப்பிரதாசங்கள் வழங்கப்படுகின்றன. இது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகும்.

குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ போரை முடிவுக்குக் கொண்டு வந்த தலைவர். அவரைப் பழிவாங்கும் நோக்கில் சில தமிழ் டயஸ்போராக்கள் செயற்படலாம். உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் வைத்து மஹிந்தவைப் பழிவாங்கக்கூடும். ஆகவே, மஹிந்தவுக்குப் பாதுகாப்பு அவசியம். வரப்பிரசாதங்களில் ஒன்றுதான் பாதுகாப்பாகும்.” – என்றார்.

# புதுமணத் தம்பதிகளுக்கு அரசாங்கத்தின் வீடுகள்

இலங்கையில் புதுமணத் தம்பதிகளுக்கு வீடு வழங்கும் திட்டம் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் பங்குபற்றி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

திருமணத்திற்குப் பின்னர் தங்கள் சொந்த வீட்டில் வாழ விரும்பும் இளம் தலைமுறையினரின் கனவை இந்த திட்டம் நிறைவேற்றும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் உள்ள வீட்டு வசதி பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கில் அடுத்த ஐந்து முதல் பத்து ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், புதிய வீடுகளைக் கட்ட அரச ஊழியர்களுக்குக் கடன் வழங்கும் திட்டமும் அரசாங்கத்திடம் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# அதிகார பகிர்வு விவகாரம் தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தயாசிறி ஜயசேகர கோரிக்கை



அதிகார பகிர்வு விவகாரம் தொடர்பாக அரசாங்கம் தெளிவான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அல்லது அதனை ரத்து செய்யவேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் முறையாக பகிரப்படாமல், அது வெறும் "வெள்ளை யானை" என சித்தரிக்கப்படுவது நியாயமானதல்ல.

வடகிழக்கு மாகாணங்களில் சுயநிர்ணயம் தோன்றும் என்ற பெயரில் மாகாண அதிகாரங்களை மறுக்கும் நிலை தவறானது என்றும், இதற்கு ஒருசில அரசியல் கட்சிகள் பொறுப்புக்கூற வேண்டும்.

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்தும் பிற்போடுவது நியாயமற்றது.

மூன்று தனிநபர் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தேர்தலை தாமதிக்க அரசாங்கம் சட்டமா அதிபரை பயன்படுத்துவதாக சந்தேகம் எழுந்துள்ளது.

மாகாணங்களுக்கு காவல்துறை மற்றும் காணி அதிகாரங்கள் பற்றி விசேட அவதானம் செலுத்தப்படுகிறது.

அதிகாரங்களை மாகாண முதலமைச்சருக்கு வழங்கினால் அது அரசியல்மயப்படுத்தப்படும் என்பது உறுதி.

எனவே, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை கண்காணிக்க தேசிய காவல்துறை ஆணைக்குழு மற்றும் காணி ஆணைக்குழு ஊடாக விசேட வழிமுறையை செயற்படுத்த வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசாங்கம் மந்தகதியில் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

முடியுமாயின் மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமன அரசாங்கத்துக்கு சவால் விடுகின்றேன்." என்றார்.

# தேசபந்துவைப் பதவி நீக்க ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு



பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவி நீக்கம் செய்யும் யோசனைக்கு ஆதரவாக வாக்களிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோனை நியமித்ததை ஆரம்பத்திலேயே ஐக்கிய மக்கள் சக்தி எதிர்த்தது.

அவரது நியமனத்துக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் அதனால் யோசனைக்கு ஆதரவு வழங்குவது இயல்பானதாகும் என்றும் அவர் கூறினார்.

2002 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க அதிகாரிகளை நீக்குதல் (நடைமுறை) சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட தேசபந்து தென்னகோனை பதவி நீக்கும் யோசனை இன்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இதுவரையில் குறித்த தீர்மானம் தொடர்பில் அதிகாரப்பூர்வ நிலைப்பாட்டை எடுக்கவில்லை என அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தங்களது நாடாளுமன்றக் குழு சரியான நேரத்தில் அது குறித்து முடிவு செய்யும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக தேசபந்து தென்னகோனின் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் தவறான நடத்தை குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு அவர் மீதான குற்றச்சாட்டுகளில் அவரை குற்றவாளி என கண்டறிந்திருந்தது.

# நாட்டில் 10 மாவட்டங்களுக்கு மின்னல் தாக்கம் எச்சரிக்கை

நாட்டை சூழவுள்ள கடற்பரப்புகளில், மணித்தியாலத்துக்கு 50-60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று அதிகரித்து வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன், வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 50 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில், இன்று கடுமையான மின்னல் தாக்கம் ஏற்படக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதன்படி, வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் 10 மாவட்டங்களுக்கு மின்னல் தாக்கம் குறித்த சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேற்படி பகுதிகளில் உள்ள பொது மக்கள் மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில், அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# திடீர் மின்தடை தொடர்பில் இன்று பகிரங்க விசாரணை

நாடு முழுவதும் கடந்த பெப்ரவரி 9 ஆம் திகதியன்று ஏற்பட்ட திடீர் மின் தடை குறித்து இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழு இன்று பகிரங்க விசாரணை யொன்றை முன்னெடுக்கவுள்ளது.

2002 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க பொதுப்பயன் பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 18 இன் கீழ் இந்த விசாரணை நடைபெறவுள்ளது.

அதற்கமைய, கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாப கார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 8:30 மணி முதல் மாலை 6:00 மணி வரை விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மின்சாரத் துறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதையும் மின்வெட்டுக்கான மூல காரணங்களை அடையாளம் காண்பதையும் இந்த அமர்வு நோக்கமாகக்



கொண்டுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதில் பகேற்பதற்காக பொதுமக்களுக்கும் தொடர்புடைய தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேவைப்பாட்டை நிறைவு செய்யாததாக மாறிவிடும். அதன் காரணமாக அந்த வேட்பு மனுக்களே தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியற்றவையாகிவிடும் என்பதைச் சுட்டிக்காட்டி இருந்தேன்.

இந்த இரு பெண் வேட்பாளர்களினதும் தகைமையீனமும் தகுதியின்மையும் அந்தத் தேர்தலில் போட்டியிட்ட அக்கட்சியின் இரண்டு வேட்பு மனுக்களுமே தகுதியற்றவைக்கான காரணமாக அமைந்துள்ளது என்பதை விளக்கி இருந்தேன்.

இந்த அடிப்படையில் தேர்தல் ஆணையமே அந்த கட்சி சார்பில் அச்சபைகளுக்கு உறுப்பினர்கள் தெரிவானமை தவறு என்ற நடவடிக்கையை தானாகவே ஆரம்பிக்க வேண்டிய கடப்பாடு உடையது என்பதையும் சுட்டி இருந்தேன்.

அந்த நடவடிக்கையை எடுப்பதற்கு தேர்தல் ஆணையம் தவறுமானால், அது தொடர்பில் தேர்தல் ஆணையத்துக்கு உரிய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகின்றது.

முதலில் அந்தக் கட்சி சார்பில் சபைக்கு தெரிவானவர்களின் அத்தெரிவு காரணமாக தமது வாய்ப்பை இழந்த அடுத்த நிலையில் இருக்கும் பிற கட்சிகளின் அல்லது சுயேச்சை குழுக்களின் வேட்பாளர்கள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி, தமக்கு நீதியை நிலை வழங்குமாறு கோரி, தேர்தல் ஆணையத்துக்குக் கடிதம் எழுதுவார்கள் எனத் தெரிகின்றது. அதற்கான தயாரிப்புகள் நடப்பதாகவும் அறிகிறேன்.

அந்த விண்ணப்பங்களுக்கு அல்லது முறையீடுகளுக்கு உரிய பதில் தேர்தல் ஆணையத்திடமிருந்து கிடைக்காத பட்சத்தில், பாதிக்கப்பட்ட மற்றைய கட்சிகளின் சார்பில் இவ்விடயத்தை சுட்டிக்காட்டி தேர்தல் ஆணையத்துக்கு முறையீடு சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிகிறது. சம்பந்தப்பட்ட கட்சிகள் அதற்குத் தயாராகி வருகின்றன.

இந்த இரண்டு வழிகளிலும் நீதி கிடைக்காமல் விட்டால், அடுத்து உயர் நீதிமன்றத்துக்கு சென்று, தேர்தல் ஆணையத்திற்கு உரிய வழிகாட்டுதலை வழங்குவதற்கான முறையீடுகள் அதற்குரிய சட்ட வடிவங்களில் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிகின்றது.

சாவகச்சேரி விடயம் இதுவென்றால், இதே நிலையில், இதே பின்புலத்தில் யாழ் மாநகர சபையிலும் குறைந்தபட்சம் இரண்டு கட்சிகளில் இத்தகைய தகுதியீனத்தோடு உறுப்பினர்கள் தெரிவாகி இருக்கின்றார்கள் என்று தெரிகிறது. சாவகச்சேரி தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பு இவ்வளவு குறுகிய காலத்தில் – விரைந்து – வந்திருக்கின்றமை அவர்களுக்கு நிச்சயம் வயிற்றைக் கலக்கத் தொடங்கி இருக்கும் என்று நினைக்கிறேன்.

அவர்களுடையவிடயத்திலும்சம்பந்தப்பட்ட வழக்குகளை தொடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்று தெரிகின்றது.

இதில் ஒருவர் ஏற்கனவே யாழ் மாநகர சபைக்கு பிறிதொரு கட்சியின் சார்பில் உறுப்பினராகத் தெரிவாகி, அக்கட்சியினால் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, அதனால் மாநகர சபை உறுப்பினர் பதவியையும் அரைவழியில் இழந்தவர். இப்போது இன்னொரு கூட்டு சார்பில் அவர் யாழ் மாநகர சபை உறுப்பினராகி இருக்கின்றார்.

இந்த உள்ளூராட்சி தேர்தல் நடந்த சமயம் அவர் மட்டக்களப்பு மாவட்ட வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டிருந்தவர் என்று கூறப்படுகின்றது. இந்தத் தடவை அவர் வேட்பு மனுவில் கொடுத்த அவரது யாழ். விலாசம் கூட அவருக்குரியதல்ல என்பதும் தெரிய வந்திருக்கின்றது.

மழை விட்டும் தூவானம் ஓயவில்லை என்பது போல, உள்ளூராட்சி தேர்தல் முடிந்தும் அதன் சர்ச்சைகள் முடியாமல் நீடிக்கப் போகின்றன என்றே தோன்றுகின்றது.

## மீட்ட சான்றுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அகழ்ந்தெடுக்கப்பட்ட ஆடைகள் உள்ளிட்ட 54 சான்றுப்பொருள்கள் இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை பொதுமக்கள் பார்வைக்கு நீதிமன்றினால் வைக்கப்படவுள்ளன.

இதன்போது பொதுமக்கள் குறித்த சான்றுப்பொருள்களைப் பார்வையிட்டு அது பற்றிய தகவல்கள் தெரிந்திருப்பின் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கோ, நீதிமன்றுக்கோ குறிப்பிட முடியும்.

இந்நிலையில் செம்மணி மனிதப் புதைகுழி சான்றுப்பொருள்களைப் பார்வையிடுவது தொடர்பான ஒழுங்கு விதிகள் பற்றி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கடந்த 2ஆம் திகதி கட்டளை ஒன்றை வெளியிட்டிருந்தது.

குறித்த நீதிமன்றக் கட்டளையில் எட்டு விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

ஒழுங்குவிதிகளை மீறும் நபர்களுக்கு எதிராக, நீதிமன்றினால் உரிய சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளை ஒழுங்குவிதிகளை பின்வருமாறு,

1. மேற்படி நடவடிக்கையானது ஒரு நீதிமன்ற நடவடிக்கையாக காணப்படுவதனால், நீதிமன்ற நடவடிக்கைக்குரிய கண்ணியம், அந்நடவடிக்கையில் பங்கேற்கும் நபர்களால் பேணப்பட வேண்டும்.

2.காணாமல்போனநபர்கள்தொடர்பில் முறைப்பாடுகள் செய்த உறவினருக்கே முன்னுரிமை வழங்கப்படும். அவர்கள் தம்முடைய உறவுகள் காணாமல் போனதை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ஒன்றினைச் சமர்ப்பிப்பது விரும்பத்தக்கது. ஏனைய நபர்களை அனுமதிப்பது தொடர்பில், முற்படுத்தப்படும் தரவுகளின் அடிப்படையில் நிர்மானிக்கப்படும்.

3. மேற்படி நடவடிக்கையில் பங்குபற்றும் நபர்களது பெயர், அடையாள அட்டை இலக்கம் (அல்லது கடவுச்சீட்டு இலக்கம் அல்லது சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்), முகவரி என்பன நீதிமன்ற உத்தியோகத்தர்களால் பதிவு செய்யப்படும்.

4.இருபத்தொரு (21) வயதிற்கு மேற்பட்ட நபர்கள் மாத்திரம் மேற்படி நடவடிக்கையில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

5. பங்குபற்றும் நபர்கள் மேற்படி நீதிமன்ற நடவடிக்கையையோ அல்லது காண்பிக்கப்படும் பொருட்களையோ, ஒலி, ஒளிப்பதிவு செய்யவும், எந்தவொரு இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துவரவும் தடை விதிக்கப்படுகின்றது.

6. மேற்படி நடவடிக்கையில் பங்குபற்றும் காணாமல்போன நபர்களின் உறவினர்கள் சட்டத்தரணி ஒருவருடன் தோன்றவும் நீதிமன்றம் அனுமதி வழங்குகின்றது.

7.பங்குபற்றும் நபர்கள் காண்பிக்கப்படும் பொருட்களைக் கையாளுவதற்குத் தடை விதிக்கப்படுகின்றது.

8. மேற்படி நடவடிக்கை ஒரு நீதிமன்ற நடவடிக்கையாகக் காணப்படுவதனால், மேற்படி நடவடிக்கைகளை ஒளிப்பதிவு செய்வது தடை செய்யப்படுகின்றது. ஆகவே, இந்நடவடிக்கை நடைபெறும் வேளையில், சித்துப்பாத்தி இந்து மயான வளாகத்திற்குள் ஊடகவியலாளர்கள் வரும் ஒளிப்பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மேற்படி ஒழுங்குவிதிகளை மீறும் நபர்களுக்கு எதிராக, நீதிமன்றினால் உரிய சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்." – என நீதிமன்றக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழின அழிப்பு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின்போது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார். இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"செம்மணி மனிதப் புதைகுழியில் ஸ்கானிங் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. ஸ்கானிங் தரவுகள் ஆராயப்பட்டு மனித என்புத் தொகுதிகள் வேறு எந்த இடங்களில் இருக்கின்றன என ஆராய்ந்து அங்கே அகழ்வுகளை மேற்கொள்வார்கள்.

மேலும் நாளை (இன்று) செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தடயப் பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் 130க்கும் மேற்பட்ட மனித என்பு தொகுதிகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாளும் மனித என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்ட வண்ணமே உள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் பின்னணியாக, 1999ஆம் ஆண்டு சோமரத்ன ராஜபக்ஷவின் சாட்சியத்தின் பிரகாரம் முதலில் 15 என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து தற்போது மேற்கொள்ளப்படும் அகழ்வு பணிகளின் போது நூற்றுக்கும் மேற்பட்ட மனித என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.

இராணுவ உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கமைய 300 தொடக்கம் 400 வரையான உடல்கள் புதைக்கப்பட்டதாக 1999களில் சோமரத்ன ராஜபக்ஷ கூறிய கருத்துக்களுடன் இப்போதைய மனித என்புத் தொகுதிகள் ஒத்துப்போகின்றன.

உண்மையைக் கண்டறிதல் பொறிமுறையில், இலங்கையில் நிலத்துக்குக் கீழேதான் பல உண்மைகள் புதைந்திருக்கின்றன. ஆகவே, மனிதப் புதைகுழிகள் தோண்டப்படுகின்ற விடயம் உண்மையைக் கண்டறியும் செயல்முறையில் மிகவும் முக்கிய பங்கை வகிக்கின்றது.

செம்மணிப் புதைகுழி மழுங்கடிக்கப்படுமா என பலருக்குச் சந்தேகங்கள் உள்ளன. எனவேதான் அகழ்வுப் பணிகளை வெளிப்படைத் தன்மையோடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நாம் ஆரம்பம் முதலே கூறி வருகின்றோம்.

செம்மணிப் புதைகுழி தொடர்பில் சர்வதேச மன்றுக்கு சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாக கிருசாந்தி படுகொலை வழக்கின் முக்கிய குற்றவாளி என நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ஷ சொன்னதாகப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்து கொண்டோம். அது உண்மை எனில் அவர் சர்வதேச மன்றில் சாட்சியம் அளிப்பதற்கு நாம் வழி செய்து கொடுக்க வேண்டும். இது ஒரு திருப்புமுனையான

07

# புலிகளிடம் இருந்து நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தினர் போர்க்குற்றவாளிகளா?

## நாமல் எம்.பி. கடும் கொதிப்பு



"விடுதலைப்புலிகள் அமைப்புக்கு நிதி வழங்கியவர்கள் முதலீட்டாளர்களாகவும், அந்த அமைப்பிடம் இருந்து நாட்டைப் பாதுகாத்த படையினர் போர்க்குற்றவாளிகளாகவும் பார்க்கப்படும் நிலையே தற்போதைய ஆட்சியின் கீழ் காணப்படுகின்றது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கில் அப்பாவி இளைஞர்களின் கழுத்தில் சயனைட் குப்பிகளைத் தொங்கவிடுவதற்கு நிதி வழங்கிய தமிழ் டயஸ்போராக்களை மிகப்பெரிய முதலீட்டாளர்களாகக் கருதும் அரசு, போரை முடிவுக்குக் கொண்டு வந்த படையினரைக் குற்றவாளியாகப் பார்க்கின்றது. முன்னாள் கடற்படைத் தளபதி சிறையில் உள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பை ஊக்குவித்தவர்கள் இன்று முதலீட்டாளர்கள், அந்த அமைப்பிடம் இருந்து நாட்டைப் பாதுகாத்தவர்கள் போர்க்குற்றவாளிகளாகியுள்ளனர்.

விடுதலைப்புலிகளால் செய்ய முடியாமல்போன கலாசாரச் சீரழிவைத் தற்போதைய அரசு செய்கின்றது. அதனால்தான் பாடத்திட்டத்தில் இருந்து வரலாற்றுப் பாடத்தைக்கூட நீக்குவதற்கு முற்படுகின்றனர்." – என்றார்.

# முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய ஓய்வூதியத்தை இரத்துச் செய்யாதீர்

## அநுர அரசிடம் எஸ்.பி. வலியுறுத்து



"முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசால் வழங்கப்படும் மாளிகைகளை மீளப்பெறுவதில் தவறு கிடையாது. ஆனால், முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய ஓய்வூதியம் இரத்துச் செய்யப்படக்கூடாது. தற்போது வழங்கப்படும் தொகை அதிகரிக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு அநுர அரசிடம் வலியுறுத்தினார் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"உலகில் பலம் பொருந்திய, அபிவிருத்தி அடைந்து வரும் மற்றும் வறுமை நாடுகளில்கூட முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அவர்களின் ஓய்வுகாலத்தில் வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, இலங்கையில் இவற்றை நீக்குவதற்கு முற்படாமல், இந்த நாட்டில் செய்ய வேண்டிய பல விடயங்கள் உள்ளன. அவற்றைச் செய்ய வேண்டும்.

எனினும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசால் வழங்கப்படும் மாளிகைகளை மீளப்பெறுவதில் தவறு கிடையாது. ஆனால், முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியத்தை நீக்க முடியாது. அது அரசமைப்பில் உள்ள விடயம். தற்போது வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை அதிகரிக்கப்பட வேண்டும். அத்துடன், பணியாள் தொகுதி மற்றும் பாதுகாப்பு என்பன வழங்கப்பட வேண்டும்." – என்றார்.

### தமிழின அழிப்பு..

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சந்தர்ப்பமாக நாங்கள் கருதுகின்றோம்.

தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டமைக்கான சான்றுகள் இங்கிருந்தே ஆரம்பமாகின்றன எனத் தோன்றுகின்றன. ஆகவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஒஸ்லாப் என்கின்ற சான்றுகளைச் சேகரிக்கின்ற பொறிமுறை ஒன்று உள்ளது. அதை வரவழைத்து இங்கு நடந்த விடயங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அரச அதிகாரிகள் அல்லது அரச திணைக்களங்கள் இதிலே சற்றுப் பின்னடிப்பதாகச் சந்தேகங்கள் சில சம்பவங்கள் மூலமாக எழுகின்றன. எனவே, முழுமையான சர்வதேச மேற்பார்வையோடு வெளிக்கொணரப்பட வேண்டும். சர்வதேச பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

பழைய செம்மணி வழக்கானது கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அதனை மீள யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றி புதிய செம்மணி வழக்கோடு சேர்த்து விசாரிக்கப்பட வேண்டும்." – என்றார்.

### நேற்றும் 5 மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் 135 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டு இலக்கமிடப்பட்டுள்ளன. மேலும் இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளில் இருந்து 126 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.








# மூதூர்ப் படுகொலைகளின் நினைவேந்தல் உணர்வுடன் நேற்று திருகோணமலையில்!

**(ஏ.எச்.ஹஸ்பர்)**

மூதூரில் தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள் 17 நபர்கள் படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 19 வருடங்கள் கடப்பதை ஒட்டிய நினைவேந்தல் நேற்றைய தினம் திருகோணமலையில் இடம் பெற்றது.

இதன் போது மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வுபூர்வமாக நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த ராவண சேனா அமைப்பின் தலைவர் கு.செந்தூரன் - இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 17 தன்னார்வ ஊழியர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும், நீதி இன்றி ஏமாற்றப்பட்டு 19 வருடங்களை கடந்துள்ளது, ஏமாற்றபடுப் பட்டியலில் தான் தமிழர்கள் இருந்து கொண்டிருக்கிறோம் என்றார்.

பிரான்ஸ் நாட்டை தலைமையக கொண்டு இயங்கிய அக்ஷன் பாம் தன்னார்வ நிறுவனத்தில் பணியாற்றிய 17 ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 2006 ம் ஆண்டு நிலவிய யுத்த சூழ் நிலைக்கு மத்தியில் இவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## காற்றில் பறக்கும் வாக்குறுதிகள்

தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காக அரசியல்வாதிகள் கண்மண் தெரியாமல் வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள். ஆனால், தேர்தலில் வென்ற பின்னர் அவற்றையெல்லாம் அடியோடு மறந்து விடுவார்கள்.

இத்தகைய சாதாரண அரசியல்வாதிகளில் இருந்து தாமும் வேறுபட்டவர் அல்லர் என்பதை தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தொடர்ந்து நிருபித்து வருகிறார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தாம் எதிரணியில் இருந்த போது வாக்குகளை பெறுவதற்காக அவர் அள்ளி வீசிய பல வாக்குறுதிகளை இப்போது ஜனாதிபதி தேர்தலிலும், அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலிலும் வென்ற பின்னர் அவர் அடியோடு மறந்து போனார்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் வரை அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படும், மாகாண சபை தேர்தல்கள் தாமதம் இன்றி நடத்தப்படும் என்றெல்லாம் அவர் வழங்கிய வாக்குறுதிகள் இப்போது காற்றில் பறந்து விட்டன. தாம் வழங்கிய வாக்குறுதிகளை அவர் மறந்தே போய் விட்டார்.

அவ்வாறு காற்றில் பறக்கவிடப்பட்ட வாக்குறுதிகளின் வரிசையில் ஒன்றுதான் மன்னார் மக்களுக்கு அவர் வழங்கிய காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் தடுத்து நிறுத்தப்படும் என்ற வாக்குறுதியுமாகும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மன்னாருக்குச்சென்ற அநுர குமார திஸநாயக்க காற்றாலை மின் திட்டம் உட்பட எந்தத் திட்டமும் மன்னார் மக்களின் அனுமதியின்றி - விருப்பமின்றி - அவர்களின் பிரதேசம் மீது திணிக்கப்பட மாட்டாது என்று அழுத்தம் திருத்தமாக உறுதி கூறியிருந்தார்.

ஆனால் இப்போது மன்னார் மக்களின் கடும் எதிர்ப்பையும் புறக்கணித்து, மக்கள் கருத்துக்கு மாறாக, காதோடு காது வைத்தால் போல இரகசியமாக அமைச்சரவை அனுமதியும் வழங்கி, காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் மன்னார் தீவுக்குள்ளேயே முன்னெடுக்கப்படுகின்றது.

அது மாத்திரமல்ல, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு அதிகாரிகள் குந்தகமாக இருந்தால், அந்த நடவடிக்கைகளால் எழும் தாமதங்களுக்குரிய நஷ்ட ஈடு அந்த அரச அதிகாரியிடம் இருந்தே அறவிடப்படும் என்ற எச்சரிக்கையும் கூட அநுரகுமாரவின் அரசினால் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதனால் அரசாங்கத்தின் மீதும், அதன் தலைமையின் மீதும், மக்கள் நம்பிக்கை இழந்து, தாமே நேரடியாக எதிர்ப்புப் போராட்டங்களின் மூலமும், சட்டப் போராட்டங்களில் மூலமும் இந்த அத்துமீறல் நடவடிக்கையை தடுப்பதற்கு முயன்று வருகிறார்கள்.

மன்னார் மக்களுக்கு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தாம் வழங்கிய உறுதிமொழி தொடர்பில், தமது தற்போதைய நிலைப்பாடு யாது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அந்த மக்களுக்கு வெளிப்படையாக எடுத்துரைக்க வேண்டும். அது அவரது கடப்பாடு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# ஜார்க்கண்ட் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் மரணம்



ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வரும், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் இணை நிறுவனருமான ஷிபு சோரன், டில்லி மருத்துவமனையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 81.

இதுகுறித்து ஷிபு சோரனின் மகனும், ஜார்க்கண்ட் முதல்வருமான ஹேமன் சோரன் வெளியிட்ட பதிவில்,

“மதிப்பிற்குரிய குரு நம் அனைவரையும் விட்டுச் சென்று விட்டார். இன்று, எனக்கு பெரிய வெற்றிடம் ஏற்பட்டுவிட்டது.” என்று தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் நிறுவனர்களில் ஒருவரும், 38 ஆண்டுகளுக்கும் மேலாக அக்கட்சியின் தலைவராக இருப்பவருமான ஷிபு சோரன், 3 முறை ஜார்க்கண்ட் மாநில முதல்வராகவும், மத்திய அமைச்சராகவும் இருந்துள்ளார். இவரது மகன் ஹேமந்த் சோரன் தற்போது ஜார்க்கண்ட் முதல்வராக உள்ளார்.

ஜார்க்கண்ட் பழங்குடி அரசியலின் முகமாக அறியப்படும் ஷிபு சோரன், சிறுநீரக பாதிப்பு காரணமாக கடந்த சில வருடங்களாக அவ்வப்போது மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வந்தார். 81 வயதாகும் அவருக்கு உடல்நிலை மேலும் மோசமானதை அடுத்து, ஜூன் மாத கடைசி வாரத்தில் டில்லியில் உள்ள ஸ்ரீ கங்கா ராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஒரு மாதத்துக்கும் மேலாக தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில், மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதை அடுத்து கடந்த சில நாள்களாக அவருக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வந்தது. சமீபத்திய ஆண்டுகளில் தீவிர அரசியலில் இருந்து ஷிபு சோரன் விலகி இருந்தார் என்பது நினைவு கூரத்தக்கது.

# பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்கோஸ் 5 நாள் பயணமாக இந்தியா வருகை

## பிரதமர் மோடியுடன் இன்று சந்திப்பு




ஐந்து நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியா வந்துள்ள பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஃபெர்டினாண்ட் ரொமுவால்டெஸ் மார்கோஸ் ஜூனியர், பிரதமர் நரேந்திர மோடியை இன்று சந்திக்க உள்ளார்.

மனைவி லூயிஸ் அரனெட்டா மார்கோஸ், அமைச்சர்கள் உள்ளிட்ட உயர் மட்டக் குழுவினருடன் புதுடில்லி வந்தடைந்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியை, வெளியுறவுத்துறை இணை அமைச்சர் பபித்ரா மார்கெரிட்டா விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்றார். விமான நிலையத்தில் பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்பு மரியாதையும் அவருக்கு வழங்கப்பட்டது.

இன்று ராஜ்கோட்டில் உள்ள காந்தி நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி, அதன் பின்னர் ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்க உள்ளார்.

அப்போது, இரு தரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக இரு தலைவர்களும் ஆலோசனை நடத்த இருக்கிறார்கள். மேலும், இரு நாடுகளின் குழுக்களுக்கு இடையேயான ஆலோசனையும் நடைபெற உள்ளது.

இதையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் உடனான சந்திப்பை அடுத்து, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி. நட்டா உள்ளிட்டோரை ஃபெர்டினாண்ட் ரொமுவால்டெஸ் மார்கோஸ் ஜூனியர் சந்தித்துப் பேச உள்ளார்.

இந்தியா – பிலிப்பைன்ஸ் இடையேயான இராஜதந்திர உறவு தொடங்கப்பட்டதன் 75 ஆவது ஆண்டை முன்னிட்டு, ஜனாதிபதி ஃபெர்டினாண்ட் ரொமுவால்டெஸ் மார்கோஸ் ஜூனியர் முதல்முறையாக இந்தியா வந்துள்ளார். அவரது இந்த பயணத்தின்போது, பெங்களூர் செல்ல உள்ளார்.



# அமெரிக்க அழுத்தத்திற்கு அடிபணியாத இந்திய அரசு

## தொடரும் குற்றச்சாட்டு

இந்தியா தொடர்ந்தும் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் கொள்வனவு செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என, அமெரிக்க ஜனாதிபதியின் உயர்மட்ட உதவியாளர் ஸ்ரீபன் மில்லர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்துமாறு, இந்தியா மீது அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழுத்தம் கொடுத்த நிலையில் இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்த செயல்பாடு மூலம் ரஷ்யாவினால் முன்னெடுக்கப்படும் உக்ரைன் மீதான யுத்தத்திற்கு இந்தியா நிதி உதவி செய்வதாக ஸ்ரீபன் மில்லர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

“சண்டே மோணிங் பியூச்சேர்ஸ்“ என்ற தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில், ரஷ்ய எண்ணெய் கொள்வனவு செய்யும் விடயத்தில், இந்தியா, அடிப்படையில் சீனாவுடன் இணைந்துள்ள விடயத்தை அறியும் அமெரிக்க மக்கள் அதிர்ச்சியடைவார்கள் என அமெரிக்க ஜனாதிபதியின் உயர்மட்ட உதவியாளர் ஸ்ரீபன் மில்லர் தெரிவித்துள்ளார்.





# காசாவின் ஆக்கிரமிப்பு பகுதிக்கு அமெரிக்க சபாநாயகர் விஜயம்

காசாவின் மேற்குகரையில் உள்ள இஸ்ரேலிய குடியேற்றமான ஏரியலுக்கு அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் மைக் ஜோன்சன் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

எனினும் குறித்த விஜயமானது பாலஸ்தீன தரப்புக்களின் எதிர்வினைகளை உருவாக்கியுள்ளளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அங்கு அவர் பாலஸ்தீனப் பகுதி யூத மக்களின் சரியான சொத்து என கூறிய கூற்று பலரது எதிர்ப்பை பெற்றுள்ளது.

இது தொடர்பில் பாலஸ்தீனிய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், மேற்குக் கரையை இணைப்பது குறித்த அறிக்கை பெரிதும் பாரதூரமான விடயமாகும்.

இது சர்வதேச சட்டம், சர்வதேச சட்டபூர்வமான தீர்மானங்கள் மற்றும் போரை நிறுத்தவும், வன்முறை சுழற்சியை நிறுத்தவும், அமைதியை அடையவும் அரபு மற்றும் அமெரிக்க முயற்சிகளை அப்பட்டமாக மீறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குடியேற்றக் குற்றங்கள், குடியேறிகளின் நடவடிக்கைகள் மற்றும் பாலஸ்தீனிய நிலங்களைப் பறிமுதல் செய்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காகவும் அமைச்சகம் இதைப் பார்க்கிறது.

இது குடியேற்றங்கள் மற்றும் குடியேறிகளின் தாக்குதல்கள் தொடர்பான அமெரிக்காவின் அறிவிக்கப்பட்ட நிலைப்பாட்டிற்கு தெளிவாக முரணானது.” என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அணு ஆயுதம் குறித்துப் பேசும்போது மிகுந்த எச்சரிக்கை தேவையானதாகும்

## ரஷ்யா வலியுறுத்தல்



அணு ஆயுதம் குறித்து பேசும்போது மிகுந்த எச்சரிக்கை தேவை என்று கிரம்ளின் செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை, அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள நாடுகளுக்கு இடையேயான போராக மாறக்கூடும் என ரஷ்ய முன்னாள் ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவ் கூறியது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அமெரிக்க டொனால்ட் ட்ரம்ப், இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களை பொருத்தமான பகுதிகளுக்கு நகர்த்த தான் உத்தரவிட்டிருப்பதாக கடந்த 1ஆம் திகதி தெரிவித்தார்.

இந்நிலையில், இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய கிரம்ளின் செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ்,

"இதன் மூலம், அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் போர் கடமையில் உள்ளன என்பது தெளிவாகிறது. இது ஒரு தொடர் செயல்முறை. இதுதான் முதலில் கவனிக்கத்தக்கது.

பொதுவாக இதுபோன்ற சர்ச்சைகளில் நாங்கள் ஈடுபட விரும்ப மாட்டோம். எனவே, இது குறித்து எந்த கருத்தும் தெரிவிக்க நாங்கள் விரும்ப மாட்டோம். அதேநேரத்தில், அணு ஆயுதம் குறித்துப் பேசும்போது அனைவரும் மிக மிக கவனமாகப் பேச வேண்டும்." என தெரிவித்தார்.

ட்ரம்ப்பின் கருத்து பதற்றத்தை அதிகரித்துள்ளதாக ரஷ்யா பார்க்கிறதா என்ற கேள்விக்குப் பதில் அளித்த திமித்ரி பெஸ்கோவ், "எந்த ஒரு பதற்ற அதிகரிப்பு குறித்தும் நாங்கள் இப்போது பேசவில்லை. மிகவும் சிக்கலான, மிகவும் பதற்றம் தரும் பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது. பலரும் இது குறித்து உணர்ச்சிவசப்படுகின்றனர்." என கூறினார்.

மெத்வதேவை கிரம்ளின் எச்சரிக்க முயன்றதா என்ற கேள்விக்கு, "ஒவ்வொரு நாட்டிலும் தலைவர்கள் நடக்கும் நிகழ்வுகள் குறித்து வெவ்வேறு கண்ணோட்டங்களை, வெவ்வேறு அணுகுமுறைகளைக் கொண்டுள்ளனர், மிக மிக கடுமையான மனநிலை கொண்ட பலர் அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் இருக்கிறார்கள். இது எப்போதும் இப்படித்தான்.

ஆனால், முக்கிய விஷயம் என்னவென்றால், ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கை அரசாங்கத்தின் தலைவர் அதாவது அதிபர் புதினால்தான் வகுக்கப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும்" என குறிப்பிட்டார்.

# யேமன் படகு மூழ்கி விபத்து; பலி எண்ணிக்கை அதிகரிப்பு



யேமன் கடற் பகுதியில் புலம்பெயர் அகதிகள் பயணித்த படகு மூழ்கி விபத்துக்குள்ளானதில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 68 ஆக அதிகரித்துள்ளது.

மேற்படி படகு யேமனின் தெற்கு பகுதியிலுள்ள அப்யான் ஏடன் வளைக்குடா பகுதியில் விபத்துக்குள்ளானதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விபத்தின் போது இந்த படகில் 154 பேர் பயணித்திருந்தனர் எனவும் அவர்களில் 12 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என்றும் சர்வதேச இடம் பெயர்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுவரை 54 பேரின் உடலங்கள் கரையொதுங்கியுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் தொடர்ந்தும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாகவும் மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

# ஆளும் கட்சி மீது மக்கள் அதிருப்தி! எதிர்க்கட்சி மீதும் நம்பிக்கை இல்லை!!

## வரும் மாகாண சபைத் தேர்தலில் இ.தொ.கா. தனிவழி செல்வதே நல்லது என்கிறார் ஜீவன்



"மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் அதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது நல்லது என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். எனினும், கட்சியே இறுதி முடிவை எடுக்கும்."

– இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொழும்பு தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்வில் கலந்துகொண்ட ஜீவன் தொண்டமான் எம்.பியிடம் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி என இரு தரப்புகளுடனும் பேச்சு நடத்தினோம். எனினும், எதிர்க்கட்சியிடம் ஒற்றுமை இல்லை. ஒற்றுமை இல்லாத அமைப்பை நம்பி இருந்தால் வேலை செய்வதற்குரிய வாய்ப்பு இல்லாமல் போகும்.

உள்ளூராட்சி சபை என்பது நிர்வாக சம்பந்தப்பட்ட விடயம். அந்த நிர்வாகம் முறையாக நடந்தால்தான் மக்களுக்குரிய சேவை முறையாகச் சென்றடையும்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கட்சியே இறுதி முடிவை எடுக்கும். எனினும், நாம் தனித்துப் போட்டியிட்டால் அது நமக்குப் பயனாக இருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

ஆளும் கட்சி மீது மக்கள் அதிருப்தியில் உள்ளனர். எதிர்க்கட்சி மீதும் நம்பிக்கை இல்லை. எனவே, நாம் எமது வழியில் பயணிப்பது சிறந்தது. எனினும், கட்சியே இறுதி முடிவை எடுக்கும்." – என்றார்.

# டிஜிட்டல் பொருளாதார மாதமாக செப்டம்பரை அறிவிக்க தீர்மானம்



எதிர்வரும் செப்டம்பர் மாதத்தை டிஜிட்டல் பொருளாதார மாதமாக அறிவிக்க டிஜிட்டல் பொருளாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி அநுர குமாரதிஸாநாயக்கவின் ஆலோசனைக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே இதன் நோக்கமென டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண ஸ்ரீ தனபால தெரிவித்தார்.

செப்டம்பர் மாதத்தில் டிஜிட்டல் பொருளாதாரத்தின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், டிஜிட்டல் பொருளாதார கொள்கை மற்றும் அதன் செயன்முறைகளை உருவாக்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கண்டி எசல பெரஹறாவில் விசேட ரயில் சேவைகள்




கண்டி எசல பெரஹறாவை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எதிர்வரும் 08 ஆம் திகதி வரை இந்த விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை, பொல்கஹவெல, மாத்தளை மற்றும் நாவலப்பிட்டிய விலிருந்து இந்த ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் திணைக்களம் கூறியுள்ளது.



# மன்னார் தீவுப் பகுதியில் புதிய காற்றாலை மின் கோபுரங்களை அமைப்பதற்கு மக்கள் மிகக் கடுமையாக எதிர்ப்பு நடவடிக்கை

## அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்து தடுக்க முயற்சி

**(மன்னார் நிருபர்: எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் தீவு பகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தற்போது மன்னார் – மதவாச்சி பிரதான வீதியூடாக கொண்டு வரப்பட்டுக் கொண்டு இருக்கும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பொருள்களை மன்னார் நகருக்குள் கொண்டு வருவதற்கும் எதிர்ப்பு தெரிவித்தும் மன்னார் மக்கள் நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஒன்று கூடினர்.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளாரின் அழைப்பிற்கு இணங்க அருட்தந்தையர்கள், மூர்வீதி ஜும்மா பள்ளி பிரதம மௌலவி. பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஒன்று கூடினர்.

இந்த நிலையில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையில் சட்டத்தரணி பா.டெனிஸ்வரன், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நேசன் அடிகளார் ஆகியோர் சென்று மாவட்ட அரசாங்க அதிபர் கா.கனகேஸ்வரனுடன் கலந்துரையாடினர். இதன்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நிர்வாகம் எம்.பிரதீப்உடம்கலந்துகொண்டிருந்தார்.

தற்போது மன்னார் நகர பகுதியில் சில கிராமங்களில் புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்களுக்கு மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகருக்குள் கனரக வாகனங்களில் கொண்டு வரப்பட்டு கொண்டிருந்த காற்றாலை மின் கோபுரம் அமைப்பதற்கான பாரிய பொருள்கள் மடு பிரதான வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றை மன்னாருக்குள் கொண்டு வர மக்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். இந்த விடயம் குறித்தும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது இந்த மின் திட்ட நடவடிக்கைக்கு அமைச்சரவை அனுமதி பெற்றுக் கொள்ளப் பட்டமை தெரியவந்துள்ளது. இந்த வேலைத்திட்டத்தை அரச அதிகாரிகள் தடுத்து நிறுத்தும் பட்சத்தில் அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் மேலதிக செலவீனங்களை செலுத்த

**தொடர்ச்சி▼**






# மன்னார் தீவுப் பகுதியில் புதிய காற்றாலை மின் கோபுரங்களை அமைப்பதற்கு மக்கள் மிகக் கடுமையாக எதிர்ப்பு நடவடிக்கை

தொடர்ச்சி▲

வேண்டிய நிலை ஏற்படும் என்ற விடயமும் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக சட்டத்தரணி பா. டெனிஸ்வரன், அங்கு ஒன்று கூடிய மக்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில் –

அமைச்சரவை அனுமதி வழங்கப் பட்டமையினால் சட்ட ரீதியாக இந்த விடயத்தை அணுக வேண்டி இருக் கின்றது. இவ்விடயம் தொடர்பாக நாங்கள் ஏனைய சட்டத்தணிகளுடனும் உரையாடி இருக்கின்றோம்.

இவ்விடயம் தொடர்பாக எதிர் வரும் புதன்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து சில கட்ட ளைகளை பெற்றுக்கொள்ள உள்ளோம். எவ்வித ஆவணங்களும் இல்லாமல் உடனடியாக மாவட்ட நீதிமன்றத்தை நாடுகின்ற போது அது எமக்குப் பின் னடைவுகளை ஏற்படுத்தும்.

எனவே எதிர்வரும் புதன்கிழமை வரை மக்களின் எதிர்ப்பை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக நீதிமன்றத்தின் கட்டளையைப் பெற்றுக் கொள்ளும் வரை எமது நடவடிக்கைகளை தொடர வேண்டும்.

இந்தத் திட்டங்களினால் எதிர்கால சந்ததிகள் பாரிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க உள்ளனர். இந்த நிலையிலே இந்த விடயம் தொடர்பாக சட்ட ரீதியாக சில நடவடிக்கைக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இன்றைய தினம் (திங்கட்கிழமை) மாவட்ட ரீதியில் பாரிய போராட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் குறுகிய நேரத்தில் அதனை முன்னெ டுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதி தேர்தலின் போது மன்னா ருக்கு வருகை தந்து, மன்னாரில் மக்க ளின் எதிர்ப்பை மீறி காற்றாலை மின் உற்பத்தி திட்டம் முன் னெடுக்கப்படாது என்று கூறியிருந்தார். அத வேலைத் திட்டத்திற்கு தடை விதிக்கப்படும் என கூறி இருந்தார். ஆயினும் அந்த வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் மக்களின் ஒத்துழைப்பு எமக்குத் தேவை. – எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் மாவட்டச் செயல கத்திற்கு முன் ஒன்று கூடியவர்கள் மன்னார் நகர சுற்று வட்ட பகுதிக்குச் சென்று ஒன்று கூடினர்.

எதிர்வரும் புதன்கிழமை வரை தொடர்ச்சியாக ஒன்று கூடி தமது எதிர்ப்பை தெரிவிப்பது என்றும், காற் றாலை கோபுரங்கள் அமைப்பதற்காக கொண்டு வரும் பொருள்களை மன் னார் நகருக்குள் அனுமதிப்பதில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.

மக்களுக்கு ஆதரவாக உள்ளு ராட்சி மன்ற உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட் டவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.









# வேலணையில் நவீன வசதிகளுடன் கூடிய பொது விளையாட்டு மைதானம் அமையும்!

## கட்டுமானத்திற்கான ஏதுநிலைகள் குறித்து பல்துறைசார் அதிகாரிகள் ஆய்வு

வேலணை பிரதேசத்திற்கான நவீன வசதிகளுடன் கூடிய பொது விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்கான அமைவிடத்தை வேலணை – அராலி சந்தி பகுதியில் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த அமைவிடத்துக்கு துறைசார் அதிகாரிகள் நேரில் சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

வேலணை பிரதேச சபையின் கோரிக்கையை ஏற்று வேலணை பிரதேச சபையின் தவிசாளர், வேலணை பிரதேச சபையின் செயலாளர் ஆகியோருடன் வேலணை பிரதேச செயலக அதிகாரிகள், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், காணி அதிகாரி மற்றும் துறைசார் அதிகாரிகள் ஒன்றிணைந்து இக்கள ஆய்வை நேற்றுக் காலை மேற்கொண்டனர்.

இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அதிகார எல்லைக்குள் அராலி சந்தியில் இருக்கும் அரச காணியை வேலணைப் பிரதேசத்துக்கு மட்டுமல்லாது தீவகம் முழுவதற்குமான விளையாட்டு துறையின் நலன்கருதி தூர நோக்குப் பார்வையுடன் சில வரையறைகளுடன் வழங்குவதற்கு நீர்ப்பாசன திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் விளையாட்டு மைதானத்தை அமைப்பாதற்கான திட்ட முன்மொழிவுடன் கூடிய பொறிமுறைகளைத் தயாரித்து துறைசார் வழிமுறைகளூடாக அதை சமர்ப்பிக்குமாறும் வேலணை பிரதேச சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வேலணை பிரதேசத்தின் விளையாட்டுத்துறையை மெருகூட்டும் செயற்றிட்டத்தின் தொடர் நடவடிக்கையாக பொது மைதானம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சி வேலணை பிரதேச சபையால் கடந்த 2018 ஆம் ஆண்டுமுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது அதற்கான ஏதுநிலைகள் உருவாகியுள்ள நிலையில் மைதானத்தை அமைப்பதற்காக 4 ஏக்கர் நிலப்பரப்பு வழங்கப்படவுள்ளது. மைதான வளாகத்திற்குள் நவீன வசதிகளுடன் விளையாட்டு துறைசார் கட்டுமாணங்களை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த நிலப்பரப்பு நீரேந்து பகுதியாக இருப்பதனால் நீர் சேகரிப்பு செயற்பாடகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மைதானம் அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனொ பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார்..






# மூதூர்ப் படுகொலையின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று

மூதூர்ப் படுகொலையின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் உணர்வு பூர்வமாக யாழ்ப்பாணத்திலும் நேற்று மாலை அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையம் முன்பாக இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

திருகோணமலை மூதூரில் இருந்த பிரான்ஸ் நாட்டின் தன்னார்வ தொண்டு நிறுவனமான அக்ஷன் பாம் நிறுவனத்தில் பணியாற்றிய 17 பேர் கடந்த 2006 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன் போது முன்னணியின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.












# மனநலம் பாதித்தவரைத் தாக்கியமையை ஆட்சேபித்து சாமிமலையில் ஆர்ப்பாட்டம்

(மஸ்கெலியா நிருபர்)

மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவரை மூன்று வர்த்தகர்கள் சேர்ந்து கடுமையாகத் தாக்கியமையையும், தாக்கிய வர்த்தகர்கள் பின்னர் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டமையையும் ஆட்சேபித்தும் தாக்குதலுக்கு உள்ளானவருக்கு நீதி கோரியும் சாமிமலை நகரில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் நேற்று மதியம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

கடந்த 30.07.2025 அன்று சாமிமலை நகரில் துரைராஜ் சண்முகநாதன் (வயது 47) என்ற கவரவலை பகுதியை சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட நபரை மூன்று வர்த்தகர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதன் பின்னர் இவர் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு இருந்து கண்டி போதனா வைத்திய சாலைக்கு மாற்ற பட்டார்.

கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மீண்டும் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றம் செய்து தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார். தாக்குதலுக்கு இலக்கானதுரைராஜ்சண்முகநாதனுக்கு நீதி கோரி சாமி மலை நகரில் நேற்று மதியம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் 200 க்கு மேற்பட்ட மக்கள் பதாகைகள் ஏந்திக் கலந்து கொண்டனர்.









# மட்டக்களப்பு வாகரையின் கட்டுமுறிவு சந்திப் பகுதியில் நூறு நாள் செயற்திட்டத்தின் கீழ் நேற்றுக் கவனவீர்ப்பு!

(பழுவூரான்)

வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னெடுப்பில் நடைபெறும் 100 நாள் செயல்முனைவின் நான்காவது வருடத்திற்கான தொடர் இம்மாதம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுத் திங்கட்கிழமை நான்காவது நாளாக மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தின் கட்டுமுறிவு சந்தி பகுதியில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

‘சமூகப் பிரச்சினைகளும் – சமஷ்டி முறையிலான தீர்வுகளும்’ என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு வடக்கு – கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் மக்கள் வாழ்வின் உண்மையான சவால்களை முன்வைத்து நிரந்தர தீர்வுகளுக்கான அரசியல் உரையாடலை உருவாக்கும் நோக்கில் இந்த 100 நாள் செயல் முனைவு நடைபெறுகின்றது.

“இலங்கை அரசே இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை உறுதி செய்க”, “சமஷ்டியே தீர்வு”, “எங்கள் வளம் – எங்கள் உரிமை” – என்கின்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் கவன ஈர்ப்பை மக்கள் முன்னெடுத்தனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய தலைமைத்துவங்களுடன் இலங்கையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. ‘ஜனநாயகம், கட்டமைப்பு மாற்றம், இன– மத பேதமின்மை’ எனும் கொள்கைகளை முன்வைத்து இவர்கள் ஆட்சிக்கு வந்துள்ளனர். எனினும் அரசியல் தீர்வு குறித்து தேசிய மக்கள் சக்தி அரசு மௌனம் காத்து வருகின்றது எனவும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

வடக்கு கிழக்கில் இராணுவ மயமாக்கம், காணி அபகரிப்பு, தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு, மகாவலிக் குடியேற்றம் மற்றும் சிங்கள மயமாக்கம், பௌத்த மயமாக்கம், தமிழ் மொழி உரிமைப் புறக்கணிப்பு, இனவாத அச்சுறுத்தல்கள் ஆகியன தொடர்ந்த வண்ணம் உள்ளன எனவும் இந்த அடக்கு முறைகளை வைத்துக் கொண்டு இன,மத பேதமின்மை குறித்து அரசு கதைப்பது நேர்மையின்மை ஆகும் எனவும் இதன் போது சுட்டிக் காட்டப்பட்டது.

இனவாதத்தில் சார்ந்து இருந்த பழைய அரசுகளைப் போல் இல்லாத தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிலையானதும், கௌரவமானதும், உரிமைகளுடன் கூடியதுமான சமஷ்டி முறையிலான அரசியல் அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தும் தீர்வுத் திட்டத்தை உடன் முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இக்கவனவீர்ப்புப் போராட்டத்தில் வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.










# கந்தளாயில் அறுவடைக்குத் தயாரான நெற்பயிர்களின் மீது விஷம் தெளிப்பு!

## பொலிஸார் மற்றும் விவசாயத் திணைக்களத்தில் முறைப்பாடு

(எஸ்.கீதபொன்கலன்)

கந்தளாய், போட்டாங் காட்டுப் பகுதியில் அறுவடைக்குத் தயாராக இருந்த ஐந்து ஏக்கர் நெற்பயிர்கள் மீது சில தினங்களுக்கு முன்னர், இனம்தெரியாதோரால் 'ரவுண்டப்' களைகொல்லி விஷம் தெளிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கந்தளாய்ப் பொலிஸ் நிலையத்திலும், விவசாயத் திணைக்களத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை, தம்பலகாமம் ஆதி கோணநாயகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான இந்த வயல் நிலத்தை, தற்போதைய சிறுபோக நெற்செய்கைக்காக விவசாயி ஒருவர் குத்தகைக்கு எடுத்துப் பயிர்செய்து வந்த நிலையிலேயே இந்த நாசகாரச் செயல் அரங்கேறியுள்ளது.

இது குறித்து பாதிக்கப்பட்ட விவசாயி கருத்துத் தெரிவிக்கையில் –

"தம்பலகாமம் ஆதி கோணநாயகர் தேவஸ்தானத்திற்குரிய இந்த வயல், கடந்த காலங்களில் கோவிலுக்குத் தொண்டாற்றும் அடியார்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. நான் இம்முறை சிறுபோகத்திற்காக இதைக் குத்தகைக்கு எடுத்து, பெரும் சிரமங்களுக்கு மத்தியில் நெற்செய்கையில் ஈடுபட்டேன்.

தற்போது பயிர்கள் செழித்து வளர்ந்து, கதிர் வந்து அறுவடையை எதிர்பார்த்திருந்தேன். இந்த நிலையில், எனது உழைப்பை அழிக்கும் கொடூர நோக்குடன் இனம்தெரியாத நபர்கள் முழு வயல் வரம்பு நீளத்திற்கும் விஷத்தைத் தெளித்துள்ளனர். இதனால் கதிர்கள் கருகி, எனது வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி உள்ளது" – எனத் தெரிவித்தார்.

தனக்கு ஏற்பட்ட பெரும் நட்டம் குறித்து கந்தளாய் பொலிஸ் நிலையத்திலும், விவசாய அதிகாரிகளிடமும் தாம் முறைப்பாடு செய்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார் .

முறைப்பாடுகளை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆரம்பித் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மனிதாபிமானமற்ற செயல் அப்பகுதி விவசாயிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.





# இருபத்தியைந்தரைப் பவுண் நகை திருட்டு; வவுனியாவில் இளைஞர் ஒருவர் சிக்கினார்!

(கி.வசந்தன்)

வவுனியாவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சோயா வீதியில் உள்ள வீடு ஒன்றில் ஒரு வாரத்திற்கு முன் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது. அது தொடர்பில் அந்த வீட்டில் வசித்து வந்தவர்கள் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அந்த முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் சமரவீர, பொலிஸ் சார்ஜன்டுகளான திசாநாயக்கா, திலீப், ஜெயதுங்க, உபாலி, உடுவெல்ல உள்ளிட்ட பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர்.



இதன்போது வவுனிய, ஓமந்தை, புதியவேலர் சின்னக்குளம் பகுதியில் வசிக்கும் 33 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தாலிக்கொடி, சங்கிலி, காப்பு, மோதிரம் உள்ளிட்ட 66 இலட்சத்து 33 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான இருபத்தியைந்தரைப் பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின் அந்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





# தலவாக்கலையில் குளத்தில் குதித்த இளைஞர் சேற்றில் சிக்கி உயிரிழப்பு

(மஸ்கெலியா நிருபர்)

தலவாக்கலை ஆடைத் தொழிற்சாலையில் இன்று முதல் வேலைக்குச் சேரவிருந்த இளைஞர் ஒருவர், நேற்று மாலை நீராடச் சென்ற குளத்தில் சேற்றில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

புஸ்ஸலாவை பகுதியைச் சேர்ந்த மயில்வாகனம் கனகரட்னம் என்ற 20 வயது இளைஞனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தனது நண்பர்களுடன் தலவாக்கலைக்கு வந்த நிலையில், நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்திருக்கிறார். நேற்று மாலை அவரது நண்பர்கள் நான்கு பேரும் குளத்தில் குளிப்பதற்காகச் சென்றுள்ளனர்.

அப்போது குளத்தில் இருந்த இரும்புத் தூண் ஒன்றிலிருந்து குதித்த போது, சேற்றுக்குள் சிக்கிக்கொண்டார் என அவரது நண்பர்கள் தெரிவித்துள்ளனர். உடனடியாக அவரை மீட்க முயற்சித்தபோதும் அது பலனளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து லிந்துலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கிளிநொச்சியிலிருந்து சட்டவிரோதமாக வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்ட பெருந்தொகையான மாட்டிறைச்சி!

## வவுனியா மாநகரசபை அதிரடி நடவடிக்கை மூலம் மடக்கியது

**(கி.வசந்தன்)**

கிளிநொச்சியில் இருந்து வவுனியாவிற்கு சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட 558 கிலோ நிறையுடைய மாட்டிறைச்சி மாநகரசபையால் நேற்றையதினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் சுகாதார சீர்கேடான முறையில் உரிய அனுமதியின்றி பெருந்தொகை மாட்டிறைச்சி கொண்டுவரப்பட்டுள்ளது.

அவை வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வைத்து பஸ்ஸில் இருந்து இறக்கப்பட்டு மீண்டும் ஓட்டோவில் ஏற்றிச் செல்லப்படவிருந்தன.

சம்பவம் தொடர்பாக வவுனியா மாநகரசபைக்கு பொதுமக்களால் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு சென்ற மாநகரசபையின் பிரதி முதல்வர் ப.கார்த்தீபன், சபை உறுப்பினர் அருணன் மற்றும் சுகாதார பரிசோதகர் ஆகியோர் இந்தச் செயற்பாட்டை தடுத்து நிறுத்தியமையுடன் இறைச்சியைப் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

மீட்கப்பட்ட இறைச்சியின் நிறை சுமார் 558 கிலோ என தெரிவிக்கப்படுகின்றது. இந்த இறைச்சி சுகாதாரப் பரிசோதகரின் மேற்பார்வையில் எடை பார்க்கப்பட்டு மாநகரசபையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

அதனை கொண்டு வந்த நபர் மற்றும் ஓட்டோ சாரதிகள் இருவர் உள்ளடங்கிய மூவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வவுனியா மாநகரசபை தெரிவித்துள்ளது.









# இஸ்லாமிய கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் வவுனியா குருமண்காடு பகுதியில் நாட்டப்பட்டது

(வவுனியா நிருபர்)

வவுனியா, குருமண்காடு காளி கோவிலுக்கு அருகாமையில் இஸ்லாமிய கலாசார மண்டபத்திற்கான அடிக் கல் நேற்று முன்தினம் நாட்டி வைக்கப்பட்டது.

வவுனியா, குருமன்காடு காளி கோவிலுக்கு அருகாமையில் இஸ்லாமிய கலாசார மண்டபம் அமைப்பதற்கு பட்டாணிச்சூர் புளியங்குளம் பகுதியில் வசித்து வரும் இஸ்லாமிய மக்கள் பல வருடங்களாக முயற்சிகளை மேற்கொண்ட போதும் காணி விடுவிப்பு மற்றும் நகரசபையின் அனுமதி மறுப்பு போன்ற பல்வேறு காரணங்களால் கட்டடம் அமைக்க முடியாத நிலை காணப்பட்டது.

தற்போது அதற்கான அனுமதிகள் அனைத்தும் பெறப்பட்டு இஸ்லாமிய கலாசார மண்டபம் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடளுமன்ற உறுப்பினர்களான கே.காதர் மஸ்தான், முத்து முகமது, மாநகர சபை உறுப்பினர்களான பர்சான், அப்துல் பாரி, எம். லரீவ், மௌலவிகள், உலமாக்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# இன்றைய ராசி பலன்கள் - 05.08.2025




இன்று உங்களிடம் நம்பிக்கையும் உறுதியும் நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் பணியின் செயல்திறனில் உங்கள் திறமையை நிரூபிக்க சாதகமாக இருக்கும்.உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி பொங்கும்.

இன்று உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கு சாதகமான நாள். பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று சில மாற்றங்கள் காணப்படும். அதற்கு தக்கவாறு நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் பேசும்போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. யோகா மற்றும் தியானம் அனைத்து விதத்திலும் உங்களுக்கு நற்பயன் அளிக்கும்.

கடின உழைப்பின் மூலம் வெற்றி கிடைக்கும். என்றாலும் நற்பயன் கிடைக்க நீங்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டும். உங்களின் புதுமையான கருத்துக்கள் மூலம் உங்கள் படைப்புத்திறன் பிரகாசிக்கும். உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள நீங்கள் சமநிலையோடு நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.




நீங்கள் இன்று எதிர்படும் சவால்களை விவேகத்துடனும் உறுதியுடனும் கையாள வேண்டும்.உற்சாகமான நேர்மறையான போக்கை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்காது. பனிச் சுமை காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணியில் சிறந்த பலனைக் காண உங்கள் பணிகளை ஒழுங்காக திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் லேசான விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். நகைச்சுவையான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணப்ற்றாக்குறை காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் தேவைகளை சந்திக்க போதிய பணம் கையில் இருக்காது.




இன்று மிகவும் பரபரப்பாக காணப்படுவீர்கள். இன்று உங்களின் எளிமையான திட்டமிட்ட அணுகுமுறை மூலம் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். உறுதி மற்றும் தைரியம் மூலம் உயர்வான வெற்றியை அடைவீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள். பனியின் மீதான உங்கள் அர்ப்பணிப்பு நன்மை பெற்றுத் தரும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்களின் இந்தப் போக்கின் காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் சேமிப்பு கணிசமாக அதிகரிக்கும். இன்று அதிக பணம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.இன்று உங்களிடம் காணப்படும் நேர்மறையான ஆற்றல் காரணமாக நீங்கள் ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று உங்கள் எதிர்காலம் பற்றிய அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். உங்கள் இலக்கை நோக்கி முயற்சி எடுப்பீர்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள். அது உங்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தித் தரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடனான உறவை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடனான பிரச்சினை என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாடான அணுகு முறையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

இன்று போதிய அளவு பண வரவு இருக்காது. ஏற்றத்தாழ்வு காரணமாக நிதியில் ஸ்திரத்தன்மை சாத்தியம் இல்லை.




இன்று சில பதட்டமான சூழ்நிலை காணப்படும். அதிலேயே அதிக நேரம் கழியும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம்.

பணிகளின் இயல்பு கடினமாக இருப்பதன் காரனமாய் நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இத்தகைய போக்கை தவிர்த்தல் நல்லது.வீட்டுப் பராமரிப்பிற்காக பணம் செலவு செய்யவேண்டியிருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. இன்று அவநம்பிக்கையும் பதட்டமும் காணப்படும். இசை கேட்பது அல்லது புத்தகம் படிப்பது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று பணிச்சுமை அதிகரித்துக் கொண்டே இருக்கும். உங்கள் பணிகளை இன்று எளிதாக முடிக்கும் நிலை காணப்படாது.

உங்கள் மனதில் ஏற்படும் குழப்பமான எண்ணங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது நல்லது.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். அதனை சமாளிப்பது இயலாத நிலையாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று மிகவும் வெற்றிகரமான நாளாக இருக்கும். நீங்கள் உங்கள் செயல்களை எளிதாகவும் மகிழ்ச்சியாகவும் மேற்கொள்வீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள். அனைத்து விதத்திலும் வளர்ச்சி காணப்படும்.

பணியிடத்தில் நீங்கள் சிறப்பாகவும் தன்னிச்சையாகவும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் உணர்வுகளை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். வங்கியில் கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.08.2025




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். இசை கேட்பது அல்லது திரைப்படம் பார்ப்பது போன்ற நிகழ்சிகள் மூலம் மனதை திசை திருப்பி ஆறுதல் பெறலாம்.

நீங்கள் பொறுமையின்றி செயல்படு வதை விட புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்ள இது அவசியம்.

உங்கள் துணையிடம்உணர்ச்சி வசப்பட்ட மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படும். கையிலிருக்கும் பணத்தைக் கொண்டு சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று அனைத்து செயல்களிலும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைப்பது கடினமாக உணர வீர்கள். நீங்கள் பதற்றத்துக்கு ஆளாவீர்கள்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும்.

சில தவறான புரிந்துணர்வின் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்படும்.

இன்று குடும்பத்தின் நலனுக்காக தேவையற்ற செலவுகள் காணப்படும். அதிக செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும். கால் வலியால் பாதிக்கப்படலாம். இது உங்களுக்குச் சற்றுக் கவலையை அளிக்கும்.




இன்று விருப்பமான பலன் காண சாதகமான நாள் அல்ல. நீங்கள் உங்கள் முன்னேற்றம் குறித்து கவலைப் படுவீர்கள். எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் பாதையில்வரும் தடைகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். பணிகளை நம்பிக்கையுடன் கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும். ஆன்மீக ஈடுபாடு சிறந்த ஆறுதல் தரும். நீங்கள் விரைவில் புனித யாத்திரை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

பணியைப் பொறுத்தவரை நல்ல பலனடைவீர்கள். உங்கள் கடின உழைப்புக்குப் பாராட்டும் அங்கீகாரமும் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனனைந்து வீட்டில் நடைபெறவிருக்கும் சுப நிகழ்ச்சி குறித்த திட்டங்களை திட்டுவீர்கள். இதனால் உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி கிட்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறிது பணம் இழக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் திடமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

# மது போதையில் பஸ்ஸை செலுத்திய சாரதி 14 நாள்கள் விளக்கமறியலில்!






**(க.கிஷாந்தன்)**

மது போதையில் இலங்கைப் போக்கு வரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸை செலுத்திச் சென்றார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சாரதி, நுவ ரெலியா நீதுவான் திருமதி லங்காகனி பிரபூத்திகா முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போது, சந்தேக நபரான சாரதியை இம்மாதம் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதுவான் உத்தரவிட்டார்.

வெலிமடையிலிருந்து நுவரெலியா வழியாக நீர்கொழும்புக்கு ஏராளமான பயணிகளுடன் சென்ற திவுலப்பிட்டிய டிப்போவிற்குச் சொந்தமான பஸ்ஸை நுவரெலியாவின் சீதாஎலிய பகுதியில் நுவரெலியா பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பொலிஸ் அதிகாரிகள் நேற்று முன் தினம் நிறுத்திச் சோதனை செய்தபோது, சாரதி குடிபோதையில் இருப்பதை உறுதிசெய்தனர். இத்சிய டுத்து சாரதி கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, பஸ்ஸில் பயணித்த பயணிகள் அனைவரும் மற்றுமொரு பஸ்ஸில் ஏற்றப்பட்டனர் எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

மேலும், அந்த பஸ்ஸில் சாரதி இருக்கையின் பின்புறம் சாரதி பயன்படுத்திய போத்தலில் மிகுதியாக இருந்த சட்டவிரோத மதுபானமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரான சாரதி அசங்க சஞ்சீவ பிரியதர்ஷன (வயது47) திவுலப்பிட்டிய – மெதகம்பிட்டிய பகுதியை சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.